**சுருக்கம்**

வேளாண்மை – உழவர் நலன் – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்-கோயம்புத்தூர், பூச்சி அருங்காட்சியகம் (Insect Museum) மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் - ரூ.125.00 இலட்சம் - நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (பக) துறை**

அரசாணை (நிலை) எண்.126

நாள் : 15.06.2022.
திருவள்ளுவர் ஆண்டு 2053,
சுபகிருது வருடம்,
ஆனித் திங்கள் – 01 ஆம் நாள்

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 284, வேளாண்மைத் (பக) துறை, நாள் 03.12.2020.
2. பதிவாளர் மற்றும் செயல் துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடித எண். TNAU/ Insect Museum / Annual Maintenance / Funds request, நாள் 15.11.2021 மற்றும் 17.03.2022.

*****

**ஆணை:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டுவரும் பூச்சி அருங்காட்சியகத்தை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் பராமரிப்பதற்காகவும் 2020-2021-ஆம் நிதியாண்டிற்கு ரூ.20.44 இலட்சம் ஒப்பளிப்பு செய்து பார்வை (1)-ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை (2)-இல் படிக்கப்பட்ட பதிவாளர் மற்றும் செயல் துணைவேந்தர் அவர்களின் திருந்திய கருத்துருவில் இந்த அருங்காட்சியகம் பொது மக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் மற்றும் உழவர்கள் போன்ற அனைத்து தரப்பினருக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வருங்காட்சியகம் குழந்தைகளுக்கு ஆர்வத்தை தூண்டுவதிலும், எதிர்கால இந்தியாவின் விஞ்ஞானிகளை உருவாக்குவதிலும் ஒளிவிளக்காக விளங்குகிறது என்றும், இதுவரை 167

பள்ளிகள், 50 விவசாய கல்லூரிகள், 44 கலை அறிவியல் கல்லூரிகளின் மாணவர்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 28 கல்லூரிகளின் (வேளாண் கல்லூரிகள் உட்பட) மாணவர்கள் பார்வையிட்டு பூச்சிகளின் அறிவியலை பற்றிய முழு நுண்ணறிவைப் பெற்றுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், துணிகர மூலதன திட்டத்தின் கீழ் (Venture Capital Scheme) தற்போது பூச்சி அருங்காட்சியகம் இயக்கப்பட்டு, இதன் செயல்பாடு மற்றும் பராமரிப்பு செலவிற்கான நுழைவுச் சீட்டு கட்டணமாக மாணவர் ஒருவருக்கு ரூ.30/-ம் பொது மக்களுக்கு ரூ.50/-ம் வசூலிக்கப்படுவதாகவும், சராசரியாக, ஒரு நாளைக்கு சுமார் 100 பார்வையாளர்கள் இவ்வருங்காட்சியகத்தை பார்வையிடுகின்றனர் என்றும், ஆனால், கோவிட் -19 பெருந்தொற்று காரணமாக பார்வையாளர்கள் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது என்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளர் மற்றும் செயல் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

4. இச்சூழ்நிலையில், அருங்காட்சியகத்தை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் பராமரிப்பதற்காகவும் வருடத்திற்கு ரூ.15.00 இலட்சம் வீதம் ஐந்து வருடத்திற்கு (2022-2023 முதல் 2026-2027 வரை) மொத்தம் ரூ.75.00 இலட்சம் தொடர் செலவினமாகவும், ரூ.50.00 இலட்சம் தொடரா செலவினமாகவும் ஒப்பளிப்பு செய்து வழங்குமாறு பதிவாளர் மற்றும் செயல் துணை வேந்தர் அவர்கள் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார். இது குறித்த தொடர் செலவினம் மற்றும் தொடரா செலவின விவரங்களை அவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :-

| அ. தொடரும் செலவினம் (Recurring Expenditure) ஆண்டிற்கு ரூ.15 இலட்சம் வீதம் 5 ஆண்டிற்கு (2022-2023 முதல் 2026-2027 வரை) | | | |
|---|---|---|---|
| வ. எண் | விவரங்கள் | ஆண்டிற்கு (ரூபாய் இலட்சத்தில்) | 5 ஆண்டிற்கு (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. | ஒப்பந்தப் பணியாளர்கள் மற்றும் துணைப் பணியாளர்களின் ஊதியம் | 10.44 | 52.20 |
| 2. | பூச்சிசேகரிப்பு, பூச்சிசேகரிப்பு பொருட்கள் மற்றும் இதர நுகர்பொருட்கள் | 2.50 | 12.50 |
| 3. | பராமரிப்பு மற்றும் தற்செயலான செலவினம் | 2.06 | 10.30 |
| | மொத்தம் | 15.00 | 75.00 |

| ஆ. தொடரா செலவினம் (Non- Recurring Expenditure) | | |
|---|---|---|
| வ. எண். | விவரங்கள் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | பூச்சி அருங்காட்சியகத்தில் தட்பவெப்ப மாறுதலில் உண்டாகும் சிதைவுகளிலிருந்து காப்பு | 15.00 |
| 2. | பழைமையான பூச்சிகளின் காப்பகத்திற்கு தீ தடுப்பு அமைத்தல் | 30.00 |
| 3. | பூச்சி அருங்காட்சியகத்தை மென்பொருள் மயமாக்குதல் | 5.00 |
| | மொத்தம் | 50.00 |

(அ). தொடரும் செலவினக் கூறுகள்:-

1. ஒப்பந்த பணியாளர்கள் மற்றும் துணை பணியாளர்களின் ஊதியம் (ஆண்டிற்கு ரூ. 10.44 இலட்சம்)

| பூச்சி அருங்காட்சியகத்தின் மேம்படுத்தல் மற்றும் வருடாந்திர பராமரிப்பு | | |
|---|---|---|
| வ. எண். | ஒப்பந்த பணியாளர்கள் மற்றும் துணை பணியாளர்களின் தொகுப்பூதியம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1 | முதுநிலை ஆராய்ச்சியாளர் - ஒரு நபர் (மாத ஊதியம் ரூ.31,000/-) | 3.72 |
| 2 | தொழில்நுட்ப உதவியாளர் - ஒரு நபர் (மாத ஊதியம் ரூ.18,000/-) | 2.16 |
| 3 | ஒப்பந்த திறன் பணியாளர்கள் - இரு நபர்கள் (பணியாளர் வருங்கால வைப்பு நிதியுடன் கூடிய மாத ஊதியம் ரூ.11,000/-) | 2.99 |
| 4 | தினக்கூலி பணியாளர் மற்றும் ஒத்துழைப்பு சேவை | 1.57 |
| | மொத்தம் | 10.44 |

பூச்சி அருங்காட்சியகத்தில் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் பணிகளான பூச்சி சேகரிப்பு, சீர்படுத்துதல் மற்றும் பராமரிப்பிற்கு, (Insect Collection, Curation and Maintenance) மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பூச்சி பன்முகத்தன்மையை (Cataloguing the Insects) புதுப்பிக்கவும் ஒப்பந்த பணியாளர்கள் மற்றும் துணை பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

2. பூச்சி சேகரிப்பு, பூச்சி சேகரிப்பு பொருட்கள் மற்றும் இதர நுகர்பொருட்கள் (ஆண்டிற்கு ரூ.2.50 இலட்சம்)

ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் பூச்சி சேகரிப்பிற்கான பொருட்கள் மற்றும் இதர நுகர்பொருட்கள் பூச்சிகளை பராமரிக்க மிக அவசியம்.

3. பராமரிப்பு மற்றும் தற்செயல் செலவினம் (ஆண்டிற்கு ரூ.2.06 இலட்சம்) (Maintenance and Other Incidental Expenses)

பூச்சி அருட்காட்சியகத்தை தினந்தோறும் பராமரிக்கவும் மற்றும் எதிர்பாராத செலவினங்களை (Unforeseen Expenditure) மேற்கொள்ளவும் இத்தொகை தேவைப்படுகின்றது.

(ஆ). தொடரா செலவினக் கூறுகள் :

1. பூச்சி அருட்காட்சியகத்தின் தட்பவெப்ப மாறுதலால் உண்டாகும் சிதைவுகளிலிருந்து காப்பு (ஆண்டிற்கு ரூ.15 இலட்சம்)

காலப்போக்கில் அருங்காட்சியகத்திற்குள் நீர் கசிவு (Seepage of Water) ஏற்படுவதற்கு வழிவகுக்கும் எந்தவொரு கசிவுகளிலிருந்தும் அருட்காட்சியகத்தைப் பாதுகாப்பதற்கு தட்பவெப்பம் மிகவும் அவசியம். மேலும், வருடத்தின் பெரும்பகுதியில் அதிக வெப்பநிலை காரணமாக உலர்த்தும்போது சேமிக்கப்பட்ட பூச்சிகள் நொறுங்க வாய்ப்புள்ளது. எனவே பூச்சிகளின் நீண்ட கால சேமிப்புக்கு வெப்ப காப்பு பூச்சு (Weathering from Higher Temperature) மிக அவசியம்.

2. பழமையான பூச்சிகளின் காப்பகத்திற்கு தீ தடுப்பு அமைத்தல் (ரூ.30 இலட்சம்) (Fire Proofing with gas suppresstion system)

1906 - ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட பூச்சிகள் பூச்சி அருங்காட்சியகத்தில் சேமிக்கப்பட்டுள்ளன. அதன் பழமையான மதிப்பைத் தவிர அவை குறிப்பு சேகரிப்புகளாகவும் செயல்படுகின்றன. தீ விபத்திலிருந்து முழு நேர பாதுகாப்பை உறுதி செய்திட தீ தடுப்பு அமைப்புக்களை அமைத்தல் மிகவும் அவசியம்.

3. பூச்சி அருங்காட்சியகத்தை மென்பொருள் மயமாக்குதல் (ரூ.5 இலட்சம்) (Digitisation)

பூச்சி அருங்காட்சியகத்தை உலகத்தின் எவ்விடத்திலிருந்தும் காணொலி மூலம் கட்டணம் செலுத்தி காண்பதற்கான வசதியை ஏற்பாடு செய்தல்.

5. மேற்காணும் பதிவாளர் மற்றும் செயல் துணைவேந்தர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, உலகத்தரம் வாய்ந்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பூச்சி அருங்காட்சியத்தை முறையாகப் பராமரிப்பது வேளாண் கல்விக்கு மிகவும் இன்றியமையாதது என்பதனால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்

கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் பூச்சி அருங்காட்சியகத்தை (Insect Museum) மேம்படுத்துவதற்காகவும் மற்றும் பராமரிப்பதற்காகவும் (Upgradation and Maintenance) கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ.1,25,00,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) (தொடர் மற்றும் தொடரா செலவினம்) கீழ்கண்ட விவரப்படி நிருவாக ஒப்பளிப்பு வழங்கியும், 2022-2023-ஆம் ஆண்டிற்கு ரூ.65,00,000/- (ரூபாய் அறுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:-

| | | |
|---|---|---|
| (அ). தொடர் செலவினம் (வருடத்திற்கு ரூ. 15 இலட்சம் வீதம் 5 வருடத்திற்கு - 2022-2023 முதல் 2026-2027 வரை) | | |
| 1. | ஒப்பந்தப் பணியாளர்கள் மற்றும் களப் பணியாளர்களின் ஊதியம் | ரூ. 10.44 இலட்சம் |
| 2. | பூச்சிசேகரிப்பு, பூச்சிசேகரிப்பு பொருட்கள் மற்றும் பிற நுண்பொருட்கள் | ரூ. 2.50 இலட்சம் |
| 3. | பராமரிப்பு மற்றும் தற்செயல் செலவினம் | ரூ. 2.06 இலட்சம் |
| | மொத்தம் | ரூ. 15.00 இலட்சம் x 5 வருடத்திற்கு = ரூ. 75.00 இலட்சம் |
| (ஆ) தொடரா செலவினம் (ரூ. 50 இலட்சம்) | | |
| 1. | பூச்சி அருங்காட்சியகத்தில் தட்பவெப்ப மாறுதலில் உண்டாகும் சிதைவுகளிலிருந்து காப்பு | ரூ. 15.00 இலட்சம் |
| 2. | பழைமையான பூச்சிகளின் காப்பகத்திற்கு தீ தடுப்பு அமைத்தல் | ரூ. 30.00 இலட்சம் |
| 3. | பூச்சி அருங்காட்சியகத்தை மென்பொருள் மயமாக்குதல் | ரூ. 5.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ. 50.00 இலட்சம் |
| | ஆக மொத்தம் | ரூ. 125.00 இலட்சம் |

(அ) மேற்கூறப்பட்ட செலவினங்களுக்காக தனியே வங்கிக்கணக்கு பராமரிக்கப்பட வேண்டும்.

(ஆ) 5 வருடத்திற்கு (2022-2023 முதல் 2026-2027 வரை) தொடர் செலவினமாக ரூ.15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதையடுத்து, மேற்கொள்ளப்படும் ஆண்டு வரவு-செலவின விவரங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நிதிக்குழுவிடம் ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இ) பூச்சி அருங்காட்சியகத்தைப் பார்வையிட வரும் அனைத்து அரசுப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் இலவசமாக அனுமதிக்கபட வேண்டும்.

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2415. வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் -01. பயிர் வளர்ப்பு-120-ஏனைய நிறுவனங்களுக்கு நிதி உதவி – மாநிலச் செலவினங்கள் – AB. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு உதவித் தொகை-309. உதவித் தொகை - 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.

(IFHRMS த.தொ.கு. 2415 01 120 AB 309 03)

7. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.65,00,000/- மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2022-2023-ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கிட வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2022-2023 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி எடுத்துச் செல்லப்பட வேண்டும். மேலும், இச்செலவினத்தை 2022.2023-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்க குறிப்பும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (வ.செ.பொ.1 / வேளாண்மை –உழவர் நல)த் துறைக்கு அனுப்புமாறு பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலும், 01.04.2021 அன்றைய தேதியில் மீதமுள்ள இருப்புத்தொகையான ரூ.10.81 இலட்சத்தை 2021-2022 மற்றும் 2022-2023 நிதியாண்டிற்கான செலவினங்களை மேற்கொள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

9. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண். 28281/வே.-உ.ந/2022, நாள் 13.06.2022-இல் வழங்கிய ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதயொதுக்கப் பேரேடு எண். 0360 (முன்னூற்று அறுபது).

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
துணை வேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641003.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641003.
வேளாண்மை இயக்குநர், சென்னை-600 005.
வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர்-641003.
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA/ E&RSA), சென்னை-600 018 (பெயரில்)
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர்-641018.
துணை இயக்குநர், உள் தணிக்கை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641003.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை-600 009.

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை-600 009.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை-600 009.
நிதித் (வேளாண்மை - உ ந/வ.செ.பொது-1/II/வ.வ.I) துறை, சென்னை-600 009.
உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை-600 009.
வேளாண்மை – உழவர் நலத் (அ.ந.மு.3) துறை, சென்னை-600 009.
கோ.எண்.24447/பக/2021.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்